Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 16 டிசம்பர், 2022

## *நெஸ்டமோல்ற்று* ‘Aramunata Shakthiyak’ போற்றுதற்குரிய 1,000 இலங்கை அன்னையரின் அபிலாஷைகளுக்கு வலுவூட்டுகிறது

நெஸ்லே நிறுவனத்தின் *நெஸ்டமோல்ற்று* முன்னெடுக்கும் ‘Aramunata Shakthiyak’ எனும் திட்டமானது, தற்போதைய சமூக-பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் தமது குடும்பங்களின் முன்னேற்றத்தை உறுதி செய்ய, அர்ப்பணிப்புடன் உழைத்து வருகின்ற நாடு முழுவதும் உள்ள போற்றுதற்குரிய அன்னையரின் விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்பை அங்கீகரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு செயற்திட்டமாகும். அந்தவகையில், நெஸ்லே லங்காவின் பிரதான வர்த்தகநாமமானது, இலங்கை குடும்பங்களின் அபிலாஷைகளை வலுப்படுத்தும் முயற்சியில், அத்தகைய 1,000 அன்னையருக்கு 3 மாதத்திற்கான நெஸ்லே *நெஸ்டமோல்ற்றை* விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2022 செப்டெம்பரில் தொடங்கப்பட்ட இந்த முயற்சியில், வாடிக்கையாளர்கள் தங்கள் வாழ்க்கையில் போற்றுதற்குரிய அன்னையரின் பெயர்களைப் பரிந்துரைக்கும்படியும், சமூக ஊடக தளங்கள் வழியாக அவர்களின் ஊக்கமளிக்கும் கதைகளைப் பகிர்ந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். நாட்டின் நாற்திசையிலிருந்தும் இம்முயற்சிக்கு அமோகமான வரவேற்பைப் பெற்றிருந்த நிலையில், பரிந்துரைக்கப்பட்டவர்கள் மத்தியிலிருந்து தகுதிவாய்ந்த 1,000 பேரைத் தேர்ந்தெடுத்து இந்த வர்த்தகநாமம் அவர்களுக்கு வெகுமதி அளித்துள்ளது.

“இலங்கையில் தலைமுறை தலைமுறையாக அபிமானம் பெற்றுள்ள ஒரு வர்த்தகநாமமாக திகழ்ந்து வருவதால், அவர்களின் குடும்பங்களுக்கு பலத்திற்கான தூணாக இருக்கும் போற்றுதற்குரிய அன்னையரின் அபிலாஷைகளுக்கு எங்கள் ஆதரவையும், சக்தியையும் வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இது உண்மையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் கடினமான காலகட்டம். ஓயாத திடசங்கல்பம் இத்தருணத்தில் மிகவும் முக்கியமானது. எனவே, இந்த பிரச்சாரமானது, பகிரப்பட்ட எழுச்சியூட்டும் கதைகள் மூலம் நேர்மறையான சிந்தனையைப் பரப்ப உதவியது என்று நாம் நம்புகின்ற அதே சமயம், போற்றுதற்குரிய இந்த அன்னையர், சவால்களுக்கு மத்தியில் தங்கள் குடும்பத்தின் அபிலாஷைகளை வலுப்படுத்துவதற்கான அவர்களின் முயற்சிகளைத் தொடர ஊக்குவிப்போம்,” என்று நெஸ்லே லங்காவின் பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்புக்களுக்கான துணைத் தலைமை அதிகாரியான திரு. ருவான் வெலிகல அவர்கள் தெரிவித்தார்.

நெஸ்லே நிறுவனம் 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாகத் திகழ்ந்து வருகிறது. நாட்டில் விற்பனை செய்யப்படுகின்ற அதன் தயாரிப்புக்களில் 90% இற்கும் மேற்பட்டவை குருணாகலிலுள்ள அதிநவீன தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. நிறுவனத்தின் முதன்மையான வர்த்தகநாமமான, *நெஸ்டமோல்ற்று* 60 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் குடும்பங்களின் நம்பிக்கையை வென்று, அவர்களால் சுவைத்து மகிழப்பட்டு வருகின்றது. பிரத்தியேகமாக இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்பட்டு, நாட்டின் மிகவும் அபிமானம் பெற்ற மோல்ற்று அடங்கிய பானம் என்ற தனித்துவமான நாமத்துடன், மோல்ற்று அடங்கிய பார்லி மற்றும் பாலின் நலச்செழுமைகளை வழங்கி வருவதுடன், அத்தியாவசியமான ஊட்டச்சத்துக்களால் இது செறிவூட்டப்பட்டுள்ளது.

---


**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |